தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோயில்,

கோவூர், குன்றத்தூர் வட்டம், காஞ்சிரம் மாவட்டம்.

## ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கோவூர், அருள்மிகு சுந்தரேஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் கீழ்காணும் விவரப்படியான பணிகளுக்கு இந்து சமய அறநிலையத்துறையில் பதிவு செய்த திருத்தேர் ஸ்தபதிகளிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. ஒப்பந்தபுள்ளி படிவம் விற்பனை 23.03.2022 முதல் 12.04.2022 முற்பகல் 11.00 மணி வரை. பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தபுள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்.12.04.2022 பிற்பகல் 2.00 மணி வரை, ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும் நாள்.12.04.2022 பிற்பகல் 3.00 மணி

| வ. எ. | வேலையின் பெயர் | பணியின் மதிப்பு ரூ. | டெண்டர் படிவ விலை ரூ. | முன் வைப்புத் தொகை ரூ. | பணி செய்து முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்தக்காரர்களின் தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | புதிய திருத்தேர் செய்யும் பணி | 89,99,300/- (G.S.T உட்பட) | 15000/- + 18% G.S.T | 55,000/- | 18 மாதங்கள் | இந்து சமய அறநிலையத்துறையில் பதிவு செய்த திருத்தேர் ஸ்தபதிகளிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகிறது. |

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தக்காரர்கள் முன் வைப்புத்தொகையினை இத்திருக்கோயில் அலுவலகம் இயங்கும் காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், கோவூர், அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் அசல் ரசீது இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். முன்வைப்புத்தொகைக்கான ரசீது இணைக்காத ஒப்பந்த புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. ஒப்பந்தபுள்ளி வழங்கும் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த படிவத்துடன் 1) ஒப்பந்த பதிவு நகல் 2) பதிவு நீட்டிப்பு நகல் 3) வருமானவரி சான்று 4) GST சான்று 5) பணி முன் அனுபவச்சான்று இணைக்கப்படவேண்டும்.
3. 23.03.2022 முதல் 12.04.2022 வரை முற்பகல் 11.00 மணி வரை (அலுவலக கடிகாரத்தின்படி) மேற்குறிப்பிட்ட பணிக்கு திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகத்தில் குறிப்பிட்டுள்ள படிவத்திற்குரிய கட்டணம் செலுத்தி ஒப்பந்த படிவம் பெற்றுக்கொள்ளலாம்.
4. அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கோவூர், குன்றத்தூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், செயல் அலுவலர் அலுவலகத்தில் 12.04.2022 செவ்வாய்கிழமை பகல் 02.00 மணி வரை (அலுவலக கடிகாரத்தின்படி) மூடி முத்திரையிடப்பட்ட உறையில் பூர்த்தி செய்த ஒப்பந்த படிவங்கள் பெறப்படும் 12.04.2022 செவ்வாய்கிழமை அன்று பகல் 3.00 மணிக்கு (அலுவலக கடிகாரத்தின்படி) அச்சமயத்திலிருக்கும் ஒப்பந்தகாரர்கள் மற்றும் இலாகா அலுவலர்கள் முன்னிலையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் திறந்து பதிவு செய்யப்படும்.
5. எந்த ஒரு ஒப்பந்த புள்ளியையும் எந்த விதமான காரணமும் தெரிவிக்காமல் நிராகரிக்கவும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் இத்துறை அதிகாரிகளுக்கு முழு அதிகாரம் உண்டு.
6. ஒப்பந்த புள்ளிகள் கோரும் ஒப்பந்தக்காரரின் பண வரம்பு மதிப்பீட்டுத் தொகைக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும்.
7. ஒப்பந்தக்காரர்கள் மேற்கண்ட துவக்க (Work order) வேலை உத்திரவு கிடைக்கப்பெற்றவுடன் ஒரு வார காலத்திற்குள் செயல் அலுவலருக்கு ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதி கொடுத்தல் வேண்டும்.
8. இந்து சமய அறநிலையத்துறைப் பொறியாளரின் மேற்பார்வையில் வேலையை ஒப்பந்ததாரர் செய்ய வேண்டும். பொறியாளரின் அளவு பதிவின்படி பணம் பட்டுவாடா செய்யப்படும். ஒப்பந்தக்காரர்களுக்கு முன்பணம் வழங்க இயலாது.
9. ஒப்பந்தக்காரர்கள் இடையில் வேலை செய்யாவிடில் அவர் செலுத்திய முன் வைப்புத்தொகை திருப்பி வழங்க இயலாது.
10. ஒப்பந்த படிவத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்ததாரர்கள் கையொப்பம் செய்ய வேண்டும். ஒப்பந்த படிவத்தில் அடித்தல், திருத்தங்கள் இருந்தால் ஒப்பந்ததாரர் ஒவ்வொரு அடித்தல் திருத்தலுக்கும் கையொப்பம் செய்ய வேண்டும்.
11. மேற்படி வேலையை கீழ் ஒப்பந்தம் (உள் ஒப்பந்தம்) செய்யக்கூடாது. ஒப்பந்ததாரரே வேலையினை செய்ய வேண்டும்.
12. மேற்படி வேலையைச் செய்யும் போது தற்செயலாக ஏற்படும் விபத்துக்களுக்கு ஒப்பந்ததாரர் முழு பொறுப்பாவார்.
13. வேலையை முடித்த பின்னர் தணிக்கை ஆட்சேபணை இல்லையென்றால்தான் அனைத்து பிடித்தமும் திருப்பிக் கொடுக்கப்படும்.

14. மேற்படி வேலைக்கு இந்துசமய அறநிலையத்துறை அனைத்து சட்டம் மற்றும் எம்.டி.எஸ். சட்ட விதிகளுக்கு ஒப்பந்தக்காரர் கட்டுப்பட்டவர் ஆகும்.
15. மேலே கண்டுள்ள நிபந்தனைகளில் ஒப்பந்ததாரர் எதில் தவறினாலும் ஏற்படும் அனைத்து நஷ்டங்களும் ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.
16. ஒப்பந்த படிவம் பெறும் ஒப்பந்ததாரர் அவர் பதிவு செய்துள்ள துறையின் பதிவுச் சான்றிதழ் நகலினை சமர்ப்பித்து ஒப்பந்த படிவத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.
17. இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை www.tntenders.tn.gov.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தும் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர் அலுவலகத்தில் நேரடியாகவும் தெரிந்துக்கொள்ளலாம்.

இங்ஙனம்

பு.மு.வேதமூர்த்தி, Bsc., B.Ed.,
செயல் அலுவலர்

கோ.க.ஆனந்தபத்மநாபன், M.Com.,B.L.,
பரம்பரை அறங்காவலர்

நாள்: 23.03.2022

இடம் : திருக்கோயில் அலுவலகம்